**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :- திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ஆம் நாள் சனிக்கிழமை

**IA.No.4/2023 in OS.No.22/2018**

தமிழரசி ... மனுதாரர்/பிரதிவாதி

-எதிர்-

1) முனியாண்டி
*2) காளியம்மாள் (இறந்துவிட்டார்)
*3) பரந்தாமன்
*4) செல்வி
*5) மணிகண்டன் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
(*Amended as per order passed in I.A.No.10/2024, Dated: 06.01.2024)

இம்மனுவானது என் முன்பாக 02.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.காளிதாஸ், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.போஜராஜன், B.Sc., LLM., அவர்கள் முன்னிலையாகியும், மனுஉரை, எதிர்உரைகள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முடிக்கப்பட்டுள்ள விசாரணையை மீண்டும் மறுதிறப்பு செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடக் கோரி 151 உரிமையியல் விசாரணை சட்டப்பிரிவின் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**

தாவா மனுவில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி, இரு தரப்பு விசாரணையும், வாதிகள் தரப்பு விசாரணையும் முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது.முனியசாமி என்ற ராஜூ ஏற்கனவே வட்டி தொகைகள் பெற்றுக்கொண்டது பாக்கித்தொகை ரூ.9,20,000/-த்தில் கடந்த 12.07.2016 ஆம் தேதி மனுதாரரிடம் ரொக்கமாக ரூ.4,20,000/-ம் பெற்றுக்கொண்டுள்ளார். ஷை முனியசாமி, மனுதாரரிடம் பெற்ற தொகையை கழித்துக்கொண்டு மீதம் அசல் தொகை ரூ.5,00,000/-ம் மனுதாரரிடம் பெற்றுக்கொள்ள சம்மதித்தும் அடமானப்பத்திரங்களை செல்லடித்துக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டும் கடந்த 12.07.2016 ஆம் தேதி மனுதாரருக்கு ஆதரவாக ஒப்பந்தப்பத்திரம் சாட்சிகள் முன்பாக எழுதிக்கொடுத்துள்ளார்.

மேற்சொன்ன ஒப்பந்தப்பத்திரம் பி.சா.ஆ.2 ஆக குறியீடும் செய்யப்பட்டுள்ளது, அதில் முனியசாமி என்ற ராஜூ கையெழுத்து செய்துள்ளார். ஆனால் மேற்படி ஒப்பந்தப்பத்திரம் முனியசாமியால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்பதை மனுதாரர் தரப்பில் நிரூபிக்க வேண்டியது அவசியமானதாக உள்ளது. மனுதாரர் தரப்பில் முனியசாமி என்ற ராஜூவின் வாகன பதிவு சான்றிதழ் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1ல் உள்ள முனியசாமி என்ற ராஜூவின் கையெழுத்தினை எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.2 ஒப்புக்கொண்டுள்ளார். எனவே பி.சா.ஆ.2ல் உள்ள கையெழுத்து முனியசாமி என்ற ராஜூவின் கையெழுத்து என்பதை நிரூபிப்பதற்கு எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ள பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பரிசோதிக்க வேண்டியது மனுதாரர் தரப்பிற்கு மிகவும் அவசியமானதாகும். எனவே மேற்சொன்ன ஆவணங்களில் உள்ள கையெழுத்தை தகுதி வாய்ந்த கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஒப்பிட்டு பார்ப்பதற்கு ஆணையர் ஒருவரை நியமிப்பதற்கு அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முடிக்கப்பட்டுள்ள விசாரணையை மீண்டும் மறுதிறப்பு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்உரையின் சுருக்கம்</u>

(3–i) அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சிகளை விசாரிப்பதற்காக கடந்த 01.11.2022, 18.11.2022, 29.11.2022, 08.12.2022 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சிகளை நீதிமன்றத்தில் முன்னிறுத்தாத காரணத்தால் மனுதார் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சுமார் 3 மாதங்கள் கழித்து கையெழுத்தினை ஒப்பிட்டு பார்க்க வேண்டுமெனக் கோரி தாவா மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45ன் படி ஆவணங்களில் கண்டுள்ள கையெழுத்துக்கள் பரிசோதிக்கப்பட வேண்டுமெனில் இருதரப்பினர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களுடன் தாவா ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்க வேண்டும். மேலும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்களுடன் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்களில் உள்ள முனியசாமி என்ற ராஜூவின் கையெழுத்தை ஒப்பிட்டு பார்த்தாலே எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் போலியானது என்பது நன்கு புலப்படும்.

(3–ii) அதுமட்டுமல்லாது பி.சா.ஆ.1 ஆக முனியசாமியின் வாகன பதிவு சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக கூறியிருப்பது தவறாகும். மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள புகைப்படம் முனியசாமியுடையது என்று கூறி புகைப்படம் மட்டுமே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது முனியசாமி இறந்துவிட்டதை பயன்படுத்தி, மேற்படியாரிடம் ரூ.4,20,000/– செலுத்தியது போலவும் அதற்கு ஆதரவாக ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்திருப்பதாக கூறுவது எதிர்மனுதாரர்களுக்கு சேர வேண்டிய தொகையை செலுத்தாமல் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் போலியாக உற்பத்தி செய்யப்பட்டவையாகும். எனவே எதிர்மனுதாரர்கள் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரரது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

என்னவென்றால் மனுதாரர் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>**பிரச்சனைக்குரிய தீர்வு**</u>

(6–i) மனு உரை பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரை, அசல் வழக்குரை மற்றும் எதிர்வாதி தரப்பில் தாக்கலான எதிர்வழக்குரை, வழக்கு கோப்புகள் முழுவதும் முறையாக பரிசீலிக்கப்பட்டன. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கலான பிரிவு 151ன் கீழான மனுவும், எதிர்உரையும் முறையாக பரிசீலிக்கப்பட்டது. தற்பொழுது மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலிக்கும் பொழுது, மேற்படி சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல என்று எடுத்துக்கூறி எதிர்உரையும் தாக்கல் செய்யப்பட்டது.

(6–ii) இ.ம.எண்.5/2023ல் விரிவாக விடை காணப்பட்டதன் பிரகாரம் இம்மனுவும் அனுமதிக்கக் கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து பிரச்சனைக்கு விடை காண்கிறது.

முடிவில் இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 6ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை

T V MANI Digitally signed by T V MANI

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.4/2023 in OS.No.22/2018
**உத்தரவு நாள் – 06.06.2026**

**IA.No.4/2023 in OS.No.22/2018, Order Dated: 06.06.2026**

Orders is pronounced. As a result the petition is allowed. No order to costs.

Additional District Judge,
Srivilliputhur.